**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF THE SPECIAL SUB COURT FOR MCOP CASES, MADURAI

MCOP No. 240 / 2024

DEPOSITION OF WITNESS FOR P.W.1

| | | | |
|---|---|---|---|
| Name | : சலீம்பாதுஷா | Caste | : |
| Father/Husband Name | : மகபு பாஷா | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 09th day 07/2026.

<u>**முதல் விசாரணை**</u>

நான் மனுவின் மனுதாரர் ஆவேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் ஆகும். அதில் உள்ள சங்கதிகள் யாவும் என்னால் சொல்லப்பட்டு, தயார் செய்யப்பட்டு, நான் நன்கு படித்து புரிந்து கொண்டு கையெழுத்து செய்துள்ளேன். எனது தரப்பு சான்றாவணங்களாக கீழ்க்கண்ட ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

| S.No. | Documents | Remarks |
|---|---|---|
| Ex.P1 | முதல் தகவல் அறிக்கை | நகல் |
| Ex.P2 | காயச்சான்றிதழ் | அசல் |
| Ex.P3 | மதுரை அப்போலோ மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி ( 01.10.2023 – 28.10.2023) | அசல் |
| Ex.P4 | மதுரை அப்போலோ மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி (07.11.2023 – 11.11.2023) | அசல் |
| Ex.P5 | மதுரை அப்போலோ மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி (15.11.2023 – 29.11.2023) | அசல் |
| Ex.P6 | மதுரை அப்போலோ மருத்துவமனை வழங்கிய டிஸ்சார்ஜ் சம்மரி (12.04.2024 –17.04.2024) | அசல் |
| Ex.P7 | மதுரை அப்போலோ மருத்துவமனை வழங்கிய ரூ.28,72,188/–கான மருத்துவ பில்கள் – 4 எண்ணம் | அசல் |
| Ex.P8 | ரூ.2,03,185/–கான மருந்து பில்கள் – 102 எண்ணம் | அசல் |

| | | |
|---|---|---|
| Ex.P9 | ரூ.12,24,900/−கான பிஸியோதெரபி பில்கள் – 7 எண்ணம் | அசல் |
| Ex.P10 | ரூ.3,30,000/−கான ஹோம் நர்சிங் பில்கள் – 11 எண்ணம் | அசல் |
| Ex.P11 | எனது சம்பள சான்றிதழ் | அசல் |
| Ex.P12 | 1ம் எதிர்மனுதாரர் TN64W5159 வாகனத்தின் பதிவு சான்றிதழ் | நகல் |
| Ex.P12 | 1ம் எதிர்மனுதாரர் TN64W5159 வாகனத்தின் காப்பீடு சான்றிதழ் | நகல் |
| Ex.P13 | 1ம் எதிர்மனுதாரர் வாகனம் ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் | நகல் |
| Ex.P14 | ஆதார் அட்டையின் நகல் | நகல் |
| Ex.P15 | வங்கி கணக்கு புத்தகம் நகல் | நகல் |
| Ex.C1 | இயலாமை சான்றிதழ் (67%) | அசல் |

மனுப்படி தீர்ப்பாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து சமயத்தில் காரில் எத்தனை நபர்கள் பயணம் செய்தோம் என்றால் ஓட்டுநருடன் சேர்ந்து 5 நபர்கள் பயணம் செய்தோம். நான் பயணம் செய்த வாகனத்தில் அனுமதிக்கப்பட்ட நபர்களை விட கூடுதலான நபர்கள் பயணம் செய்தோம் என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த வாகனத்தில் பயணியாக பயணம் செய்தவர்களுக்கு அந்த வாகனத்தின் காப்பீடு மூலம் எந்த இழப்பீடும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

2. நான் என்ன படித்துள்ளேன் என்றால் டிப்ளோமோ சிவில் இன்ஜினியரிங் படித்துள்ளேன். அதனை காட்டும் ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது விபத்து நடந்த வருடம் 2023 என்றால் சரிதான். ம.சா.ஆ.11 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தில் நான் பணி அமர்த்தப்பட்டதற்கான பணிநியமன ஆணை கொடுத்தார்களா என்றால் இல்லை.

3. எனக்கு சம்பளம் வங்கி கணக்கு மூலம் கொடுத்தார்களா ரொக்கமாக கொடுத்தார்களா என்றால் ரொக்கமாக தான் கொடுத்தார்கள். அந்த நிறுவனத்தில் மொத்தம் எத்தனை நபர்கள் வேலை செய்தார்கள் என்றால் 15–20 நபர்கள் வேலை செய்தார்கள். அந்த நிறுவனத்தில் பணிபுரிந்தவர்களுக்காக சம்பள கணக்கு விவரம் பதிவேடுகளில் பராமரிக்கப்படும் என்றால் சரிதான். 15 நபர்களுக்கு மேல் வேலை பார்த்ததால் அந்த நிறுவனத்தில் PF, பணிக்கொடை பிடித்தம் செய்வார்கள் என்றால் இல்லை.

4. நான் ம.சா.ஆ.11 ஆவணத்தில் கூறப்பட்டுள்ள நிறுவனத்தில் பணி செய்து சம்பளம் பெற்றதாக காட்டும் எந்த ஆவணமும் என் கைவசம் இல்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.11 ஆவணம் விபத்து நடந்து 2 ஆண்டுகள் கழித்து 2025ம் வருடம் ஆகஸ்ட் மாதம் எனது வேண்டுகோளுக்கிணங்க வழங்கப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.11 ஆவணத்தின் உண்மை தன்மை பற்றி அதனை வழங்கிய நிறுவனத்தின் அலுவலர்களை விசாரித்து நிரூபணம் செய்ய முடியும் என்றால் சரிதான்.

5. ம.சா.ஆ.7,8 ஆவணங்கள் மிகைப்படுத்தி உற்பத்தி செய்யப்பட்டவை என்றால் சரியல்ல. எனக்கு பிஸியோதெரபி சிகிச்சை எடுத்து கொள்ள ஏதேனும் மருத்துவரால் பரிந்துரை செய்து சீட்டு வழங்கப்பட்டதா என்றால் சரிதான். ம.சா.ஆ.9 ஆவணத்தில் டாக்டர்.கமல்ராஜ் என்பவர் பிஸியோதெரபி சிகிச்சை கொடுத்ததாக நாள் ஒன்றுக்கு ரூ.1000/– வீதம் ஒரு வருடத்திற்கு ரூ.3,600,000/– பெற்று கொண்டதாக ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையில் தினசரி ரூ.1000/– பெற்று கொண்டு ரசீது எதுவும் கொடுத்தாரா என்றால் இல்லை.

6. ம.சா.ஆ.9 ஆவணத்தில் கண்ட பில்களில் ரெவன்யூ ஸ்டாம்ப் ஒட்டி கையெழுத்து செய்யப்படவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.9 ஆவணத்தின் உண்மை தன்மை பற்றி அதனை வழங்கிய பிஸியோதெரபி சிகிச்சை அளித்த மருத்துவர்களை விசாரித்து எந்தெந்த தேதிகளில் எவ்வளவு தொகை பெற்று கொண்டார்கள் என்ற விவரம் குறித்து நிரூபணம் செய்ய முடியும் என்றால் சரிதான். ஹோம் நர்சீங் சம்பந்தமாக தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.10 ஆவணத்தில் கண்ட

ரசீதுகள் அடுத்ததடுத்த வரிசை எண்களில் ரசீதுகள் வழங்கப்பட்டுள்ளது என்றும் அதன் உண்மை தன்மை குறித்து அதனை வழங்கியவர்களை விசாரித்து நிரூபணம் செய்ய முடியும் என்றால் சரிதான்.

7. ம.சா.ஆ.10 ஆவணம் நான் கேட்டு கொண்டதின் அடிப்படையில் ஒரே நாளில் அனைத்து ரசீதுகளும் மிகைப்படுத்தி எழுதப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ம.சா.ஆ.10 ஆவணத்திலும் ரெவன்யூ ஸ்டாம்ப் ஒட்டப்படவில்லை என்றால் சரிதான். ம.சா.ஆ.10 ஆவணத்தை வழங்கியவர்களை விசாரித்தால் அதன் உண்மை தன்மை தெரியவரும் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த வேலையும் செய்து வரவில்லை என்று சொன்னால் சரியல்ல.

8. மருத்துவ பில்கள் அனைத்தும் வழக்கிற்காக உற்பத்தி செய்து தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. காப்பீடு நிபந்தனைகளுக்கு மாறாக நான் பயணம் செய்த வாகனம் பயன்படுத்தப்பட்டதால் 2ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டவர் இல்லை என்றால் சரியல்ல. நான் பயணம் செய்த கார் ஓட்டுநர் நிதானமாக காரை ஓட்டி வந்தார் என்றும் திடீரென ஒரு பாதசாரி சாலையை குறுக்காக கடந்ததால் அவர் மீது மோதாமல் இருக்க ஓட்டுநர் காரை திருப்பியதால் இந்த விபத்து எதிர்பாராத விதமாக நடந்தது என்றால் சரியல்ல.

Sd/–சலீம்பாதுஷா

நீதிமன்றத்தில் மேலே சாட்சி சொன்ன சங்கதிகள் அனைத்தும் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டெழுத்தரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டி அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

SARAVANA SENTHIL KUMAR — Digitally signed by SARAVANA SENTHIL KUMAR Date: 2026.07.09 17:59:16 +0530

சிறப்பு சார்பு நீதிபதி. மோ.வா.வி வழக்குகள்,
மதுரை